செ.வெ.எண்:- 1001 நாளி:- 21.12.09

# அரசு செய்தி வெளியீடு – 21.12.2009

தமிழக அமைச்சரவையின் 41வது கூட்டம், மாண்புமிகு தமிழக முதல் அமைச்சர் கலைஞர் அவர்கள் தலைமையில் இன்று மாலை 4.30 மணி முதல் 7.15 மணி வரையில் நடைபெற்றது. அமைச்சரவையில் எடுக்கப்பட்ட முக்கிய முடிவுகள் வருமாறு :–

1. 2008ஆம் ஆண்டு பெய்த பெருமழையால் அரியலூர், கடலூர், காஞ்சிபுரம், நாகப்பட்டினம், பெரம்பலூர், புதுக்கோட்டை, தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, திருவள்ளூர், திருவாரூர் மற்றும் கரூர் ஆகிய 11 மாவட்டங்களில் பாதிக்கப்பட்ட சுமார் ஒன்பது லட்சம் ஹெக்டேர் பரப்பளவிற்கு உண்டான நிலவரி மற்றும் அதனுடன் சேர்த்து வசூலிக்கப்படும் தண்ணீர்த் தீர்வை, தலவரி, தலமேல்வரி, கூடுதல் தண்ணீர்த் தீர்வை மற்றும் கூடுதல் மேல் வரி ஆகிய இனங்களுக்கான 21 கோடியே 34 லட்சத்து 15 ஆயிரத்து 256 ரூபாயை தள்ளுபடி செய்யலாம் என அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

2. காஞ்சிபுரம் மாவட்டம், பையனூர் கிராமம். புல. எண். 448 மற்றும் பலவற்றில் உள்ள நிலத்தில் தென்னிந்திய திரைப்படத் தொழிலாளர் சம்மேளனத்திற்கு 65 ஏக்கர் நிலத்தில் – 50 ஏக்கர் நிலத்தினை வீடு கட்டவும், 15 ஏக்கர் நிலத்தினை உறுப்பினர்களின் பொதுப் பயன்பாட்டிற்காகவும், [illegible] ஆண்டுக் குத்தகையாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ. ஆயிரம் வீதம் வசூலிக்கவும் – அவற்றை 99 ஆண்டு காலத்திற்கு குத்தகையாக வழங்கவும் அமைச்சரவை முடிவு செய்துள்ளது. அஃதன்னியில், தமிழ்நாடு திரைப்படத் தயாரிப்பாளர்கள் சங்க உறுப்பினர்கள் வீடு கட்டிக் கொள்வதற்காக 10 ஏக்கர் நிலம் மட்டும் வழங்க வணிகமற்ற நோக்கத்திற்கு, ஆண்டுக் குத்தகை 7 சதவிகிதம் என்பதற்குப் பதிலாக மொத்த நில மதிப்பில் 3.5 சதவிகிதம் குத்தகையாக

நிர்ணயம் செய்து 99 ஆண்டு காலத்திற்கு நீண்ட காலக் குத்தகையாக வழங்கிட அமைச்சரவை முடிவு செய்துள்ளது.

3. தஞ்சாவூர் மாவட்டம், வல்லம் வடக்குசேத்தி கிராமத்தில் பெரியார் மணியம்மை அறக்கட்டளைக்கு மகளிர் பொறியியல் கல்லூரி கட்ட நிலம் அளிப்பது குறித்து பெரியார் மணியம்மை அறிவியல் மற்றும் தொழில் நுட்ப கல்வி நிறுவனத்தின் முறையீட்டினை ஆய்வு செய்து – மேற்படி நிலம் கடந்த இருபதாண்டுகளுக்கும் மேலாக குத்தகை அடிப்படையில் இந்நிறுவனத்தின் இருப்பிலும் அனுபவத்திலும் இருந்து வருவதாலும், மேலும் இந்த நிறுவனம் பெண்களுக்கென தனியாக தொழில் நுட்பக் கல்வி அளிப்பதன் சீரிய நோக்கினைக் கருத்தில் கொண்டும், தஞ்சாவூர் மாவட்ட ஆட்சித் தலைவரின் 9–11–2009 நாளிட்ட அறிக்கையில் ஏக்கர் ஒன்றுக்கு ரூ. 1,32,600 என விலை நிர்ணயம் செய்துள்ளதை 40 ஏக்கர் முழுமைக்கும் கடைப்பிடித்து கணக்கிட்டு மொத்தம் 53 இலட்சத்து 4ஆயிரம் ரூபாயை நில மதிப்பாக வசூலித்துக் கொண்டு வருவாய் நிலை ஆணை மற்றும் உரிய நிபந்தனைகளுடன் நில உரிமை மாற்றம் செய்வதற்கு அமைச்சரவை முடிவெடுத்தது.

4. தமிழ்நாட்டில் அத்தியாவசியப் பொருட்களின் விலை நிலவரம் மற்றும் அரசு எடுத்து வரும் நடவடிக்கைகள் குறித்து விரிவாக ஆய்வு செய்யப்பட்டது. ஏழை மற்றும் நடுத்தர மக்களை விலைவாசி உயர்வில் இருந்து பாதுகாக்க பொது விநியோகத் திட்டம் மற்றும் சிறப்பு பொது விநியோகத் திட்டத்தின் கீழ் மானிய விலையில் பொருள்கள் வழங்கி வருவதை தொடர்ந்து செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது. மாநிலத்தில் நெல், பயறு வகைகள், எண்ணெய் வித்துக்கள் மற்றும் தேவையை விட குறைந்த அளவில் உற்பத்தி செய்யப்படும் பிற முக்கிய பயிர்களின் உற்பத்தி மற்றும் உற்பத்தித் திறனை பெருக்குவதற்கான வழி முறைகளை

ஆய்வு செய்வதற்காக சிறப்பு முனைப்புக் குழு (Task Force) ஒன்றை அமைப்பதென்றும் அமைச்சரவை முடிவெடுத்தது.

5. 1–4–2002 முதல் 5–9–2006 வரையிலான காலத்தில் மாநிலங்களுக்கிடையே விற்பனை செய்யப்பட்ட தேங்காய்களுக்கு (Watery Coconut) செலுத்த வேண்டிய மத்திய விற்பனை வரி நிலுவைத் தொகை மற்றும் அதற்கான தண்டத் தொகை மொத்தம் **90 கோடியே 60 லட்சத்து 30 ஆயிரத்து 552** ரூபாயை தள்ளுபடி செய்வதென்று அமைச்சரவை முடிவெடுத்தது.

********************************************************************************

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9